# பாடசாலைப் பிள்ளைகளுக்கான தடுப்பூசி விபரங்கள்

பீல் பொது சுகாதாரம் சட்டப்பிரகாரமாக — உங்கள் பாடசாலை — வயது பிள்ளைக்கு பிள்ளையின் பாடசாலை வருடம் பூராக தடுப்பூசிக் குறிப்பை வயதிற்கு ஏற்ப தற்போதைய நிலைக்கு தக்கவாறு வைத்திருக்க வேண்டும்[1].

**உங்கள் பிள்ளையை பாடசாலையில் சேர்க்கும் சமயத்தில்**

- பாடசாலைப் பதிவு விண்ணப்பத்துடன் உங்கள பிள்ளையின் தடுப்பூசிக் குறிப்பின் பிரதியொன்றையும் சேர்த்து அனுப்பவும். பாடசாலை அக்குறிப்பை பீல் பொது சுகாதாரத்திற்கு அனுப்பி வைக்கும்.
- அப்பிரதியில் உங்கள் பிள்ளை பிறப்பில் இருந்து பெற்றுக் கொண்ட தடுப்பூசிகள் **யாவும்** உள்ளதா என பார்த்துக் கொள்ளவும்.
- உங்கள் பிள்ளை தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாமல் அல்லது அவர் தடுப்பூசி எடுத்துக் கொண்டதை உங்களால் நிரூபிக்க முடியாவிடில் உங்கள் குடும்ப வைத்தியரிடம் செல்லவும்.

**நேரகாலத்தோடு தடுப்பூசி கொடுக்கவும்**

- உங்கள் பிள்ளைக்கு நான்கு வயதிற்கும் ஆறு வயதிற்கும் இடையில் தொண்டைக் கரப்பான், கக்குவான் நுண்ணுயிர் (Petussis), ஏற்பு நோய் மற்றும் இளம் பிள்ளை வாதம் பிரசித்த உயர்வு ஊசி ஒன்று தேவை[2].
- பதினான்கு வயதிற்கும் பதினாறு வயதிற்கும் இடையில் உங்கள் பிள்ளைக்கு தொண்டைக் கரப்பான் நோய், கக்குவான் நுண்ணுயிர் மற்றும் ஏற்பு நோய் பிரசித்த தடுப்பூசி ஒன்று தேவை[2].

1. Immunization of School Pupils Act, September 1990. Queens Printer for Ontario.
2. Canadian Immunization Guide. 7th Edition. 2006. Published by the Public Health Agency of Canada. : 93/95&196/200.

- தடுப்பூசி பயன்பட சரியான காலங்களில் கொடுக்கப்பட வேண்டும். உதாரணமாக MMR (சின்னம்மை நோய், கூகை கட்டு நோய், ஜேர்மன் அம்மை நோய்) ஆகியவற்றிற்கான முதல் தடுப்பூசி குழந்தையின் முதலாவது பிறந்த தினத்திற்கு பின்பும் இரண்டாவது தடுப்பூசி முதலாவது தடுப்பூசி கொடுத்து குறைந்தது 28 நாட்களுக்கு **பிற்பாடும்** கொடுக்கப்பட வேண்டும்[2].
- மாணவர்களின் தடுப்பூசிக் குறிப்புகள் அவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கு, வயதிற்கும் தற்போதைய நிலைக்கும் ஏற்ப இருப்பதை உத்தரவாதம் செய்ய பீல் பொது சுகாதாரம் மாணவர்களின் தடுப்பூசி குறிப்புகளை ஒழுங்காக மீளாய்வு செய்கின்றது.
- வயதிற்கும், காலத்திற்கும் ஏற்ப தடுப்பூசிக் குறிப்புகள் இல்லாத மாணவர்கள் (தகுதியுள்ள விதிவிலக்கற்ற) பாடசாலைக்கு செல்ல அனுமதிக்கப்படாமல் இருக்கலாம்.
- ஒன்ராரியோ மாகாணத்திற்கு அல்லது கனடாவிற்கு வெளியாக தடுப்பூசி பெற்ற பிள்ளை ஒன்று ஒன்ராரியோ மாகாண தடுப்பூசி சட்டங்களுக்கு ஏற்ப மேலதிக தடுப்பூசிகளை பெற வேண்டி வரலாம்.
- ஒன்ராரியோ மாகாணத்தில் பாடசாலைக்கு செல்லத் தேவையான தடுப்பூசிகளை **இலவசமாக**, உங்கள் குடும்ப வைத்தியர் மூலம் பெறலாம்.
- பிள்ளை ஒருவரின் வேறு நாட்டு தடுப்பூசிக் குறிப்புக்களை பீல் பொது சுகாதாரம் **இலவசமாக** மொழி பெயர்க்கும்.

- ஒன்ராரியோ ஆரோக்கிய அட்டை இல்லாத பாடசாலை – வயதை உடைய பிள்ளை ஒருவர் பாடசாலைக்கு செல்ல, தடுப்பூசிக் குறிப்புகள் தேவையாயின் மூன்று பீல் பொது சுகாதார இடங்களில் இலவசமாக தடுப்பூசியை பெற முடியும்.

- ஈரல் அழற்சி பி (Hepatitis B) மற்றும் மூளை உறை பிதுக்கம் சி (Meningococcal C) (7ம் தரத்தில் உள்ள மாணவர்களுக்கு) மற்றும் மனித நுண்காம்புக்கட்டி அதி நுண்ணுயிர் (Human Papillomavirus) (8ம் தரத்தில் உள்ள மாணவர்களுக்கு) பீல் பொது ஆரோக்கியத்தில், பாடசாலையில் தடுப்பூசி மருத்துவமனைகள் உண்டு.

**உங்கள் பிள்ளையின் தடுப்பூசிக் குறிப்புகளை வயதிற்கும் காலத்திற்கும் ஏற்ப வைத்திருக்கவும்**

- உங்கள் வைத்தியர் அல்லது உங்கள் பிள்ளையின் பாடசாலை, பீல் பொது சுகாதாரத்திற்கு உங்கள் பிள்ளையின் தடுப்பூசிக் குறிப்பை அறிவிக்க மாட்டாது.

- உங்கள் பிள்ளை பாடசாலையில் பதிவு செய்யப்பட்டவுடன் **உங்கள் பிள்ளையின் தடுப்பூசிக் குறிப்பை அவர் தடுப்பூசி பெற்றவுடன் பீல் பொது சுகாதாரத்திற்கு** அவ்வப்போது **நீங்கள் அறிவிக்க வேண்டும்.**

- பீல் பொது சுகாதாரத்தை 905-799-7700ல் தொடர்பு கொள்ளவும். கலிடன் வாசிகள் கட்டணமற்ற 905-584-2216ல் தொடர்பு கொள்ள முடியும். மொழி பெயர்ப்பு சேவைகளும் கிடைக்கும்

- உங்கள் பிள்ளையின் தடுப்பூசிக் குறிப்புகளை www.immunizepeel.ca எனும் இணையத்தளத்தில் பதிவு செய்யலாம்.

- குறிப்பின் பிரதி ஒன்றை
7120 Hurontario Street, P.O. Box 630
Mississauga, ON L5M 2C5
(Do not send the original record)
என்ற விலாசத்திற்கு நேரடியாக எடுத்து வரவும் அல்லது அனுப்பி வைக்கவும்.
(குறிப்பின் மூலப் பிரதியை அனுப்ப வேண்டாம்)

Region of Peel
Working for you
Public Health